மலர் : 134
இதழ் : 20
பக்கங்கள் : 08
திகதி : 31.10.2010
விலை : 15.00/=

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு
Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

பாதுகாவலன்
Paathukavalan

யாழ் மறைமாவட்டத்தின் உத்தியோகபூர்வ கத்தோலிக்க பத்திரிகை

# பேரருட்திரு மல்கம் ரஞ்சித் ஆண்டகை கருதினாலாக தெரிவு

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கருதினாலாக பாப்பரசர் 16ம் பெனடிக்ற் அவர்களால் 20.10.2010 அன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

ரோம் நகரில் உள்ள சென் பீற்றர்ஸ் சதுக்கத்தில் இலங்கை நேரத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இவரது நியமனம் இடம் பெற்றுள்ளது. இவர் 24 கருதினால்களுள் ஒருவராக இணைந்து கொண்டார்.

பேரருட் திரு மல்கம் ரஞ்சித் ஆண்டகை 1947ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி குருநாகல் பொல்கஹவலையில் பிறந்தார். இவரது தந்தையின் பெயர் டொன்வில்லியம், தாயாரின் பெயர் மேரிவினிவிறட் குடும்பத்தில் ஒரே மகனாக ஆண்டகையின் முழுப் பெயர் பட்டபண்டிகே டொன் அல்பேட் மல்கம் ரஞ்சித்.

பேரருட் திரு மல்கம் ரஞ்சித் ஆண்டகை தமது ஆரம்ப கல்வியை முகத்துவாரம் சென் அன்றுஸ் வித்தியாலயத்திலும் பின்பு டிலாசால் கல்லூரியிலும் மேற்படிப்பை கொட்டாஞ்சேனை சென். பெனடிக்ற் கல்லூரியிலும் கற்றவர்.

இவர் கண்டி தேசிய குருமடத்திலும், பொறளை சென் அலோசியஸ் குருமடத்திலும் குருத்துவ கல்வியை மேற்கொண்டார். பின்பு றோம் நகரில் உள்ள ஊர்பானியா பல்கலைக் கழகத்தில் உயர்கல்வி கற்று பட்டம் பெற்றார்.

1975ம் ஆண்டு ஆனி மாதம் 20ம் திகதி ரோம் நகரிலுள்ள சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பாப்பரசர் 6ஆம் சின்னப்பரினால் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார்.

1991ம் ஆண்டு ஆனி மாதம் 17ம் திகதி கொழும்பு மறைமாட்ட துணை ஆயராக நியமிக்கப்பட்டார். இதே ஆண்டு ஆவணி மாதம் 31ம் திகதி கொழும்பு ஆயர் நீக்கிலஸ் மாக்கஸ் பெர்ணான்டோ ஆண்டகையினால் கொழும்பு மறைமாவட்ட துணை ஆயராக அபிஷேகம் செய்து வைக்கப்பட்டார்.

1995ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் திகதி ஆயராக நியமனம் பெற்று இரத்தினபுரியில் சிறப்பான சேவையாற்றி வந்தார்.

இவர் மன்னார் மடுமாதா திருவிழா நாட்களில் சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழிகளில் சிறப்பாக வழிபாடுகளை செய்து அனைத்து யாத்திரிகர்களின் மனங்களில் நீங்காத இடத் தினை பிடித்தவர் என்று குறிப்பிடத்தக்கது.

2009ம் ஆண்டு கொழும்பு மறைமாவட்ட பேராயராக இருந்த ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை ஓய்வு பெற்றதை அடுத்து மல்கம் ரஞ்சத் ஆண்டகை கொழும்பு மறைமாவட்ட பேராயராக நியமனம் பெற்றார். பேரருட்திரு மல்கம் ரஞ்சித் ஆண்டகை கருதினாலாக தெரிவானதிற்கு பாதுகாவலன் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றது.



## ஆவிக்குரிய இயல்புகளுக்கும், ஊனியல்பின் இயல்புக்கும் ஏற்ப நாம் ஒருபோதும் வாழ முடியாது

- ஆயர். தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை -



உறுதிபூசுதல் என்னும் அருட்சாதனத்தின் வழியாக தூய ஆவியானவரின் கொடைகளை நிறைவாக பெற்று அவரின் வல்லமை எம்மில் நிறைவாக செயற்பட எம் உள்ளங்களை திறந்து விடவேண்டும் தூய ஆவியானவர் எம்முள் செயலாற்றுவதினால். நாம் இறைவனை அப்பா தந்தையே என அழைக்கின்றோம். தந்தை என்றும் எம்மோடு துணை இருப்பதினால் நாம் என்றும் அஞ்சத் தேவையில்லை. எமது உடலிலே இருவகையான இயல்புகள் காணப் படுகின்றன. ஒன்ற ஆவிக்குரிய இயல்பு மற்றயது ஊனியல்புக்குரிய இயல்பு. ஆவிக்குரிய இயல்பானது எம்மை என்றும் நேரிய வழியில் இறைவனிடம் அழைத்துச் செல்கின்றது. ஊனியல்புக்குரிய இயல்பானது உலகியல் நாட்டங்களில் அதிக அக்கறை கொண்டதாக காணப் படுகின்றது. எனவே இரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடு உடையவையாகவே காணப் படுகின்றது.

எனவே நாம் ஆவிக்குரிய இயல்புகளை நமதாக்கி தூய ஆவியின் கொடைகளையும், கனிகளையும், வரங்களையும்

8ம் பக்கம் பார்க்க

## அன்னை தெரேசாவின் நூறாவது ஆண்டு பிறந்தநாளையொட்டி சபை அதிபரின் செய்தி

அன்னை தெரேசாவின் 100வது ஆண்டு பிறந்தநாள் நினைவாக சபை அதிபரின் செய்தி "அன்பு கூறுதல் மற்றும் அன்பு கூரப்படுவதன் மூலம் கிட்டும் மகிழ்வை அனைவருடனும் பகிர்வதன் வழி அன்னை தெரேசாவின் 100வது பிறந்தநாளை சிறப்பிப்போம்." என அந்நாளை ஒட்டிய வெளியிட்டு செய்தியில் சபையின் அதிபர் சகோதரி மேரி பிறேமா அழைப்பு விடுத்துள்ளார்.



இலங்கை திருச்சபையின் வரலாற்றில் 2வது கருதினாலாக தெரிவு செய்யப்பட்ட பேரருட்திரு மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களுக்கு யாழ். மறைமாவட்ட ஆயர், குருமுதல்வர், குருக்கள், துறவிகள், இறைமக்களின் உளமார்ந்த வாழ்த்துக்களும் செபங்களும் உரித்தாகுக.

## திருமறைக்கலாமன்றத்தின் பரதநாட்டிய முதுகலைமாணி பட்டமளிப்பு விழாவில் திருத்தந்தையின் பிரதிநிதி

திருமறைக்கலாமன்ற அழகியற் கல்லூரி, இந்தியாவில் உள்ள கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து நடாத்திய பரதநாட்டிய முதுகலைமாணி பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவிகளுக்கான பட்டமளிப்பு விழா 23 ஒக்டோபர் 2010 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் பேராயர் யோசவ் ஸ்பிற்ரேரி ஆண்டகை கலந்து கொண்டார். இவ்விழாவில் கலைக்காவிரி அதிபர் அருட்சகோதரி கலாநிதி மாக்கிறேற் பஸ்ரின் கலந்து கொண்டார்.

பட்டளிப்பு விழாவில் மாணவிகளுக்கான டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



இதன் இரண்டாவது அமர்வில் குரு வணக்கமாக ஆசிரியர்கள் கௌரவிப்பும் மதத்தலைவர்களின் அருள் ஆசியும் இடம்பெற்றன. திருமறைக்கலாமன்ற இயக்குனர் அருட்பணி நீ. மரியசேவியர் அடிகளாரின் கலைவழி இறைபணி என்ற விருதுவாக்குடனான மன்றத்தின் இந்த வளர்ச்சி பாராட்டுக்குரியதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்

# கல்லறைப் பூக்கள்

இறந்தவர்கள் அழிந்து போனவர்கள் - மறைந்து போனவர்கள் அல்ல. "தமது இவ்வுல வாழ்க்கை கூடாரத்தை மாற்றியுள்ளார்கள்" என்பது தான் எமது கிறிஸ்தவ நம்பிக்கை. அதனால் தான் எமது அன்புள்ளவர்களின் சாவின் - இழப்பின் வலி கடினமானதாயினும். இந்த நம்பிக்கை ஆறுதல் அளிக்கின்றது. இதுவே இக்காலத்தின் கருப்பொருளும் ஆகும்.

இறந்தவர்கள் எமக்கு விட்டுச் சென்றவை ஏராளம். அன்பு. பாசம். தியாகம். கனவுகள். இனிய நினைவுகள். எது எப்படி இருப்பினும் எமது விழித்திரையில் மறைந்து போன இவர்களுக்காக - உறவு நிலைகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவது அவர்களை இனி நினைவால் மன்னித்து விடுவது இன்னும் வாழ்வோர் ஆகிய கடமையும் பொறுப்பும் ஆகும்.

"இவ்வுலகில் வாழும் போது என்னை நேசித்தவர்களே. மரணத்திலும் என்னை மறவாதீர்கள்" என்கிற எம் உறவுகளின் ஓசை அற்ற அறைகூவல். அவசரமாக இயங்கி கொண்டு இருக்கும் எம்மை இம்மாதத்தில் சற்று நிறுத்திவைக்கிறது. இறந்தவரை நினைத்தல் என்பது. அவர்களை நினைத்து அழுவது - கவலைப்படுவது அர்த்தமல்ல. அவர்களின் விருப்பம் - எதிர்பார்ப்பு - கனவு - இவைகளை நிறைவேற்ற முயற்சிப்பது என்று அர்த்தமாகும்.

கல்லறைகளை காணும் ஒவ்வொரு வேளையும் சாவு. பயங்கரம் என்பதை விட வாழ வேண்டும் - அவ்வாழ்வில் விண்ணுலகிற்கு உரிய வற்றையே முதலில் தேட வேண்டும் என்ற எண்ணங்கள் மேலோங்க வேண்டும். விண்ணுலகில் செல்வங்களை சேர்த்து வைக்கும் முயற்சி. முதலில் மரண பயத்தை விடுவிக்கிறது. உலக வாழ்வின் நிலையற்ற தன்மையை ஆழமாக உணர்த்துகிறது. அதில் எமது போட்டி பொறமை. சண்டை சச்சரவு. கோப வைராக்கியம். உலக கவலைகள் என்பவை காணாமலே போய்விடும். இவ்வாறு நிலையான வீட்டின் கதவுகளை. தட்ட இக்காலம் ஒரு வாய்ப்பாக அமையட்டுமே.

– அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ் –

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்பணி செல்வன்

## பொதுக்காலம் 31ம் ஞாயிறு

சா.ஞா 11:22-12:2, 2தெசலோ 1:11-2:2, லூக் 19:1-10

உன்னை உலகம் வெறுத்தாலும்..............நான் இருக்கின்றேன்............

கடவுள் எல்லோரையும் ஒரே விதத்தில் அன்பு செய்பவராக இருக்கின்றார். இதனை அவர் தொன்று தொட்டு காட்டிக் கொண்டு வருவதனை நாம் விவிலியத்தில் காணலாம். "கடவுள் தாம் படைத்தது அனைத்தையும் அன்பு செய்கின்றார் அவற்றில் எதனையும் அவர் வெறுப்பதில்லை." (சா.ஞா 11:24)

"மனிதர்கள் அசிங்கம் என்று தள்ளி வைப்பவர்களை, ஆண்டவர் அழகு என்று அணைத்துக் கொள்கின்றார், குறைவானவர்கள், தீண்டத்தகாதவர்கள், என சமுதாய, சாதிய, சர்வாதிகார முதலைகளும், உள்ளம் முழுவதும் அழுக்கைச் சுமந்து கொண்டு ஊரை ஏமாற்றும் பணக்கார பயங்கங்களும், கருதும் மனிதர்களை இறைமகன் இயேசு இருகரம் கொண்டவராய் அணைத்துக் கொள்கின்றார்." இவ்வாறான ஒரு நிகழ்வுதான் இந்த ஞாயிறு எமக்கு கொடுக்கப்படுகின்றது. உரோமை பேரரசின் அதிகாரியாக மக்களிடம் வரிவசூலித்த சக்கேயு, எதிரியாக, பாவியாக, மக்களைப் பிழிந்து பணம் திரட்டுபவராக பார்க்கப்பட்டார் தனது சொந்த உறவினர்களாலும் ஊரவர்களாலும் வெறுக்கப்பட்டார். ஆனால் ஆண்டவர் இயேசு அவரை அரவணைப்பதனையும், இயேசு ஆண்டவரோடு இணைந்த பின்னர் சக்கேயுவில் நிகழும் மாற்றங்களையும் நாம் இந்த ஞாயிறு நற்செய்தியில் காணலாம்.

சக்கேயுவின் மனமாற்றம் இறைவனை இன்னும் அவருக்கு நெருக்கமாக்குகின்றது, அவரது வீட்டிற்கு மீட்பு கிடைக்கின்றது. "என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதனைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர் மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து குடிகொள்வோம். (யோவான் 14:23).

அன்பினால் எம்மோடு ஒவ்வொரு திருப்பலியிலும் உண்மையிலேயே உறவாட வரும் இயேசு, பாவிகள் எமை மன்னித்து எம்மிடம் கேட்பது இதுதான்......................நிரந்தரமான மனமாற்றம். "உன்னைத் தூய்மைப்படுத்தி உலகினில் மாய மயக்கத்தில் கலந்துவிடாமல், உன்னை உருமாற்றி யேசுவை உனதாக்கி அவரில் கலந்துவிடு எல்லாம் உனதாகும்."

## பொதுக்காலம் 32ம் ஞாயிறு

2 மக் 7:1-2, 9-14, 2 தெச 2:16-3:5, லூக் 20:27-38

உயிர்ப்பு கிறிஸ்தவ ஆன்மீக அடையாளம்

"உயிரோடு இருக்கும்போது என்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாக மாட்டார்"உயிர்ப்பும், விண்ணக மறு வாழ்வும், கிறிஸ்தவர்களின் விசுவாச சத்தியங்களின் ஆணிவேர் ஆகும். எமது உலக வாழ்க்கையானது பாவத்திற்கும் புண்ணியத்திற்கும் இடையே நடைபெறும் மாபெரும் மகா, போராட்டமாகும். ஆனால் இயேசு இப்போராட்டங்களை தவிடு பொடியாக்கி உயிர்ப்பு உண்டு என தாமே வெளிக்காட்டி, சாவை வென்று சரித்திர வீரராக விண்ணகத்தினை எமக்காக திறந்து வைத்தார். இதனையேதான் நாம் ஒவ்வொருவரும் "ஞாயிறு விசுவாச அறிக்கையில் அழகாகச் சொல்கின்றோம்."

நாம் எந்த அளவிற்கு மறுமை வாழ்வினை விரும்புகின்றோமோ,அந்த அளவிற்கு இம்மை வாழ்வையும், நற்காரியங்கள் செய்து விண்ணுக்கு உரிய புண்ணியங்களையும், இடைவிடாது சேர்த்து இறைவனை முகமுகமாக சந்திக்கும் விண்ணகப் பேரின்பத்தினை பெறுவதே இப் புவி வாழ்வில் மிக முக்கியமானதொரு செயல்பாடு ஆகும்.

மறைந்து போகும் செல்வத்தையும், உயரிய மதிப்பு, பணம், பதவிகளை இன்னும் எமது சமுதாயத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வு, இவைகளைக் இல்லா தொழித்து விண்ணக செல்வத்தினை எமதாக்கிக் கொள்ள முயலவேண்டும்.

"கிறிஸ்தவனுக்கு வாழ்வு மாறுபடுகின்றதே அன்றி அழிக்கப்படுவதில்லை."
எமது வாழ்வு குன்றில் ஏற்றிய விளக்காக அமைய பிரார்த்திப்போம்.

# இலங்கை அப்போஸ்தலர் ஜோசப் வாஸ்

15ம் பகுதி (நவாலியூர் நாயகி)

வாஸ் அடிகளைக் கண்ட கொழும்பு நகர மக்கள்
இரவுவேளைகளில் மறைமுகமாய் ஒன்றுகூடி
அருட்சாதனங்களை அவர்கையால் பெற்று
அவரது வார்த்தையால் தைரியமடைந்தனர்

இரகசியமாய் இருக்கும் குருமாரைத் தேடி
இராணுவ அதிகாரி வலை விரித்தபோது
கொழும்பைவிட்டு நீங்கிய ஜோசவ்வாஸ் அடிகள்
இலங்கைத்தீவு முழுவதுமே சுற்றி வந்தார்

காட்டுப் பாதையால் வழி நடந்த போது
காட்டு யானை ஒன்று திடீரென வந்தது
துணைக்கு வந்தவர் ஓட்டமெடுத்தனர்
அவர் அருகே வந்த யானை திசை மாறிப் போனது

புளியங் குளத்தில் பிறமதத்தவன் ஒருவன்
தனக்கொரு மகன் கிடைக்க அவரை வேண்டினான்
சிறிது காலத்தில் ஆண் குழந்தை கிடைத்தது
மகிழ்ச்சியில் திளைத்தவன் திருமுழுக்குப் பெற்றான்




வயிற்றுக்குள்ளே குழந்தை இறந்ததால்
கவலைக்கிடமான பெண்ணொருத்தியை
முழந்தாளிட்டுக் செபிக்கத் தொடங்கி
காப்பாற்றியது பேரதிசயமே

நீண்ட நாட்களாய் ஊர் ஊராய்ச் சுற்றியபின்
மீண்டும் கொழும்பை வந்தடைந்த போது
அவருக்குதவியாய் இரண்டு குருக்களை
மாகாணத்தலைவர் அனுப்பியதை அறிந்தார்

(தொடரும்)

# வரலாறு தந்த பதிப்புக்களே நிஜயத்தின் நிழல்கள்

(மறைப்பணி - றெக்னோ (இயக்குநர் கியூடெக் - கரித்தாஸ்)



யாழ் மண்ணிலே காலத்துக்குக் காலம் பல எழுத்தாளர்கள் உருவாகியுள்ளனர். அதிலும் சிறப்பாக பல வகையான கோணங்களில் அவர்களது எழுத்துக்கள் எமக்கு பயனளிப்பவையாக அமைகின்றன. அந்த வகையிலே திரு - ஞானப்பிரகாசம் அருளானந்தம் அவர்கள் எழுதிய "நிஜயத்தின் நிழல்கள்" என்ற நூலும் ஓர் வரலாற்றுப் பதிப்பாகவும் திருச்சபையின் பணி பற்றியும், அதில் பணிபுரிபவர்களது அர்ப்பணிப்புப் பற்றியும் அத்தோடு அமைப் புக்களது செயற்பாடுகளையும், தம் உறவுகளின் வாழ்க்கைப் பின்னணிகளையும் தன்னகத்தே கவிதை வடிவில் வடித்து எமக்குத் தந்திருக்கும் ஓர் உன்னத நூலே நிஜத்தின் நிழல்களாகும். அமைதியான உள்ளத்தில் ஆழமான கருத்துக்கள் உண்டு. அவை காலதி காலத்திற்கும் எமது சந்ததிக்கு தேவை என்பதனை உணர்ந்து சுயமுயற்சினால் இன்று இந்நூல் உருப்பெற்றதையிட்டு நான் அவரைப் பாராட்டுகிறேன். பொதுப் பணிதனை அவர் புரிந்தாலும், அப்பணியிலிருந்து ஓய்வுபெற்றாலும் மக்களுக்கு என்றும் தன் பணி உண்டு என்பதனை இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது என இந்நூல் வெளியீட்டு விழாவில் அருட்தந்தை அவர்கள் கூறினார். இந்நிகழ்வானது யாழ்ப்பாணம் அகவொளி நிலையத்தில் 09-10-2010 அன்று மாலை 4.00 மணிக்கு இயக்குநர் மறைப்பணி S.J. ராஜநாயகம் தலைமையில் இவ் வெளியீட்டு விழா சிறப்பான முறையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் முதல் பிரதியினை மறைப்பணி ராஜநாயகம் அவர்கள் வெளியிட்டு வைத்தார். திரு. கில்பேட் குணம் அவர்கள் முதல் பிரதியினையும் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை யாழ் மறைமாவட்டக் குருக்களும், பெரியோரும் பெற்றுக்கொண்டனர். இந்நூலுக்கான வெளியீட்டு உரையினை திரு. S.A. அழகராஜா அவர்கள் நிகழ்த்தியதும் குறிப்பிடத்தக்கது.

யே. அனுஸ்

# விழிப்பு

– சமூகப் பகுப்பாய்வு விழிப்புணர்வுக் கலந்தாய்வரங்கு

பொதுநிலையினர் கழகத்தின் ஏற்பாட்டில் ஒவ்வொரு மாதத்தில் முதல் திங்கட் கிழமைகளில் மறை பணிநிலையத்தில் மாலை 4.15 – 5.30 வரை இக்கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது. யாழ் சமூகத்திலும், திருச்சபையிலும் குறிப்பாகக் கத்தோலிக்க பொதுநிலையினர் மத்தியிலும் [illegible]ட்டிலான இறையாட்சிப் பார்வையை ஆழப்படுத்தும் நோக்கிலான கலந்தாய்வரங்காக இது நடைபெற்று வருகின்றது. வருகின்ற திங்கள் (01.11.2010) அன்று "மீள் குடியேற்றம்" என்கின்ற மையப்பொருளில் கலந்துரையாடல் நடைபெறும். ஆர்வமுள்ளவர்களை கலந்து கொள்ள பொதுநிலையினர் கழகம் அழைப்பு விடுக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த விசுவாசிகள் மட்டில் நம் கடமைகள்

– அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின் –

**அறிமுகம்**

இறந்த விசுவாசிகள் அனைவரதும் தினமானது பிலிப்பைன்ஸ் மக்களால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு ஆன்மீக நிகழ்வாகும். அன்று சேமக்காலைகள் துப்பரவாக்கப்பட்டு மலர்களால் நிரப்பப்பட்டிருக்கும். அதனால் அவை அன்று அழகிய பூங்கா போன்று காட்சியளிக்கும். குடும்ப அங்கத்தவர்கள் நாட்டின் எவ்வளவு தூரத்திலே வாழ்ந்து கொண்டிருந்தாலும் தவறாது ஒன்றுகூடி, இறந்த தம் குடும்ப அங்கத்தவர்களுக்காக மன்றாடுதல், திருப்பலி ஒப்புக்கொடுத்தல் என்பவற்றில் ஈடுபடுவர். மேலும் அன்றைய நாள் முழுவதையும் அங்கேயே கழிப்பார்கள். இவர்கள் இறந்தவரின் உடலையோ அன்றேல் கல்லறையையே அருவருப்பான ஒன்றாகக் கருதுவதில்லை என்பது இவர்களில் காணப்படும் நல்ல மனப்பாங்காகும்.

கத்தோலிக்க திருச்சபையின் நம்பிக் கையின்படி, இறப்பவர்கள் மூன்று நிலை களுள் ஒன்றுக்கு உள்ளாகின்றனர். ஒன்று விண்ணக வாழ்வு, மற்றது புனிதப்படுத்தல் வாழ்வு (உத்தரிப்பு ஸ்தலம்), அடுத்தது நரக வாழ்வு. விண்ணகத்துக்குச் சென்றவர்களுக்குச் நமது செபம், பலி என்பன தேவையில்லை. ஏனெனில் அவர்கள் ஏற்கனவே இறைப்பிர சன்னத்தில் வாழ்கின்றனர். நரகத்திற்குச் சென்றவர்கள் நித்திய தண்டனைக்கு உள்ளானவர்கள் என்பதால் நம் பக்தி முயற்சிகள் அவர்களுக்குப் பலன் கொடுக்காது. எனவே புனிதப்படுத்தல் நிலையிலுள் ளவர்களுக்கே பலன் கொடுக்கும். ஆனால் மனிதர் என்ற ரீதியில் யார் யார் எவ்வாழ்வை அடைந்துள்ளனர் என்பதை நம்மால் அறிய முடியாது. இதனால் இறந்த அனைத்து விசுவாசி களுக்காக நம் மன்றாடும்போது, பலி ஒப்புக்கொடுக்கும்போத புனிதப் படுத்தல் உலகத்தில் உள்ளோருக்கு உரிய பலனைக் கொடுக்கும்.

**1. புனிதப்படுத்தல் உலகிலுள்ளோர் நிலை?**

புனிதப்படுத்தல் உலகத்தில் நெருப்பு நிறைந்திருப்பதாகவும் அதில் இறந்த விசுவாசிகள் வேதனைகள், துன்பங்களை அனுபவிக்கின்றனர் என்ற கண்ணோட்டம் உண்டு. ஆனால் திருச்சபை இக்கண்ணோட்டத்தை பெரிதும் ஆதரிப்பதில்லை. புனிதப்படுத்தல் உலகத்தைத் துன்பம் நிறைந்ததாக அருவருப்பானதாகக் காட்ட எடுக்கும் முயற் சிகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று திரிதெந்தீன் சங்கம் தெளிவாக அறிவுறித்தியுள்ளது.

அவ்வாறாயின் புனிதப்படுத்தல் உலகில் விசுவாசிகளுக்குத் துன்பமாக அமையும் அனுபவங்கள் எவை? இது பற்றிய கண்ணோட்டங்கள் பின்வருமாறு:

1. இறந்த ஆன்மாவானது தான் இறைவனது அன்புக்கு அருகில் இருக்கின்றபோதும் தன் பாவக்கறை காரணமாக, அதை உடனடியாக அடைய முடியவில்லையே என்று ஏங்குவதே பெருந்துன்பமாக விளங்குகின்றது என்பது ஒரு கருத்து.
2. இறைவனின் அளவு கடந்த அன்பையும், தான் அடையப்போகும் மோட்ச வாழ்வின் இன்பங்களையும் கருத்தில் எடுக்காது, பாவத்தில் வாழ்ந்ததை எண்ணித் துக்கப்படுவது துன்பமாக விளங்குகின்றது என்ற இன்னொரு கருத்து உண்டு.

இவை இரண்டும் ஒன்றாக இடம்பெறும் வாய்ப்பே அதிகம் என்று கூறலாம்

**2. ஆன்மீகச் செயற்பாடுகளின் பலன்கள**

புனிதப்படுத்தல் உலகில் வாழும் விசுவாசிகளுக்காக மண்ணகத்தில் வாழ்வோர் செபிக்கின்ற பொழுது அல்லது திருப்பலி ஒப்புக் கொடுககின்றபோது அல்லது தர்மம் செய்கின்றபோது இறைவனின் இரக்கமும் அருளும் அவர்கள்மீது பொழியப்பட்டு அவர்களது புனிதப்படுத்தல் துரிதப்படுத்தப்படுகின்றது. இதனால் இவர்கள் விண்ணகப் பேரினபத்தை அனுபவித்து நித்திய இளைப் பாற்றியடைகின்றனர்.

விரிவாக நோக்குவதாயின், பாவத்தின் விளைவுகள் இறந்த விசுவாசிகளில் கறையாக ஒட்டிக்கொள்கின்றது. அதாவது இவர்கள் இவ்வுலகில் வாழ்கின்றபோது சாவான பாவமோ அல்லது அற்ப பாவமோ இழைத்திருந்தால், ஒப்புரவு அருட்சாதனத்தின் மூலம் பாவமன்னிப்பையும் இறைவனின் அருளையும் பெற்றுக்கொண்டாலும் பாவத்தின் ஆழமான விளைவுகள் அவர்களின் ஆளுமையில் ஒட்டிவிடுகின்றது. இவற்றையே நாம் பாவக் கறைகள் என்கின்றோம். பாவ மாசோடு நாம் இறைக்காட்சியின் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாது. அத்தோடு இறைவன் புனிதராக இருப்பதால் அவரை புனித நிலையிலேயே நாம் சந்திக்க முடியும். அந்த வகையில் புனிதப் படுத்தல் உலகில் இறைவனின் தூய்மைப்படுத்தலுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகின்றது.

— — — — — — — —(தொடரும்)

## திறமைமிகு இசைக் கலைஞருக்கான தேசிய விருது



இம்மாதம் 8ம் திகதி கொழும்பு சென்யோசவ் கல்லூரியில் நடந்த தேசிய கிறிஸ்தவ இலக்கிய விழாவில் இசைத்தென்றல் ம.யேசுதாசன் அவர்களுக்கு திறமைமிகு இசைக் கலைஞருக்கான தேசிய விருதை இந்நாட்டின் மாண்புமிகு பிரதமர் னு.ஆ. ஜெயரட்ண அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். இசைக்கலைஞருக்கான தேசிய விருதை பெற்றுக்கொண்ட இசைத்தென்றல் ம. யேசுதாசன் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

## தோழமைப் பங்குகளின் தாராள உதவிகள்

யாழ். மறை மாவட்டத்திலுள்ள பங்குக்ள் வன்னி மறைக்கோட்டத்திலுள்ள பங்குகளை தோழமைப் பங்காக எடுத்துக் கொண்டு அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற வேண்டுகோளுக்கிணங்க பருத்தித்துறை பங்கு தர்மபுர பங்கினை பொறுப்பெடுத்துக் கொண்டது. அதற்கமைய பருத்தித்துறை பங்கு மக்களின் அழைப்பின் பேரில் பங்குத்தந்தை அருட்பணி எட்வின் நாதன் அடிகளார் ஐப்பசி 2ம், 3ம் திகதிகளில் அங்கு சென்று பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்திலும், புலோலி புனித சூசையப்பர் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக் கொடுத்து பின்னர் எமது தர்மபுர பங்கின் நிலமையை எடுத்துக் கூறியபோது பருத்தித்துறை பங்கு மக்கள் உடனடியாக உதவி செய்ய முனைந்தார்கள். முதலில் அவர்கள் தமது பங்குத்தந்தை ஊடாக ஒரு தொகைப் பணத்தையும் பங்கின் ஆலயவழிபாட்டிற்கு தேவையான பல பொருட்களையும் அளித்துள்ளனர். அவர்களின் உதவியுடன் தர்மபுர பங்கின் ஆலயங்களுக்கு ஆலய திருத்த வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்தகைய மக்களுடைய உதவி பராட்டப் படக்கூடியதாகும். எமது பங்கின் முன்னேற்றத்திற்கு இவர்கள் செய்த தாராள உதவிகளுக்காக பங்குத்தந்தைக்கும், இறைமக்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

— அலின் பரந்தன் —

## பருத்தித்துறை மறைக்கோட்ட பீடப்பணியாளர்களின் வருடாந்த ஒன்று கூடல்

தொகுப்பு
அருட்பணி ம. பத்திநாதர்.

பருத்தித்துறை மறைக்கோட்ட பீடப் பணியாளர்களின் இரண்டாவது ஒன்றுகூடல் ஒக்டோபர் மாதம் 8ம் , 9ம் திகதிகளில் சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

இம்மறைக்கோட்ட பீடப்பணியாளர்களின் முதலாவது ஒன்று கூடல் 2008ம் ஆண்டு பண்டத்தரிப்பில் இடம்பெற்றது. இம்முறை 2வது தடவையாக மறைக் கோட்டத்தின் சிறுவர்களுக்கு பொறுப்பான அருட்தந்தையர்கள் M. பத்திநாதர், M.L. தயாகரன் அடிகளார்களின் ஏற்பாட்டில் 265 பீடப்பணியாளர்கள் ஒன்றுகூடி இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஒக்டோபர் 8ம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5மணிக்கு அனைத்து பீடப் பணியாளர்களும் ஒன்று கூடினர். முதலில் இவ் ஒன்றுகூடலின் நோக்கம் பற்றி அருட்பணி ம. பத்திநாதர் அவர்கள் எடுத்துக் கூறினார். தொடர்ந்து அருட்பணி தயாகரன் அவர்களின் தலைமையில் அறிமுகமும் குழுவாக பிரித்தல் நிகழ்வும் இடம் பெற்றன. தொடர்ந்து மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஜோண்மவுலிஸ் அவர்கள் இம்முயற்ச்சியை பாராட்டி அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். 8மணிக்கு அருட்பணி எமில்போல் அடிகளாரின் வழிநடத்தலில் நற்கருணை பஜனை வழிபாடு இடம் பெற்றது. இராவுணவை தொடர்ந்து குழுரீதியாக கலைநிகழ் வுகள் இடம்பெற்றன.

சனிக்கிழமை 9ம் திகதி காலை 5:45 மணிக்கு அருட்தந்தை ஆனந்தக் குமார் அவர்களின் நெறிப்படுத்தலில் காலை தியானம் இடம் பெற்றது. காலை 7 மணிக்கு யாழ் மறைமாவட்ட "தேவ அழைத்தல்" இயக்குநர் எமில்போல் அவர்கள் இறை அழைத்தல் பற்றி உரை நிகழ்தினார். காலை 9 மணிக்கு ஒழுக்கம், தலைமைத்துவம் பற்றிய கருப்பொருளில் உரைகள் இடம் பெற்றன. 10 மணிக்கு மறைக்கோட்டத்தில் எல்லா ஆலயங்களிலும் ஒரே விதமாக உதவுவது விரும்பத்தக்கது எனும் எண்ணத்தில் திருப்பலிக்கு உதவும் முறை பயிற்ச்சி வழங்கப்பட்டது. இப்பயிற்ச்சியை அருட்தந்தை ஆனந்த குமார் அவர்கள் வழங்கினார்.

காலை 11 மணிக்கு அனைத்து பீடப்பணியாளர்களும் தமது திருப் பலிக்கு உதவும் உடை அணிந்து கடற்கரை வீதியால் திருச்செபமாலையோடு பவனியாக ஆலயத்தை நோக்கி வந்து, மறைக்கோட்ட முதல்வர் தலைமையில் மறைக்கோட்ட குருக்கள் அனைவரும் இணைந்து பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மதிய உணவை தொடர்ந்து பங்குரீதியாக உதைப்பந்தாட்ட போட்டி இடம் பெற்றது. வருடம் தோறும் இவ் ஒன்ற கூடல் இடம்பெறவுள்ளதால் இது ஒரு சுற்றுப்போட்டியாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்குரிய சுற்றுக்கேடயத்தை சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் பீடப்பணியாளராக இறந்து காலம் சென்ற செல்வன் கலிஸ்ராஜ் ஞாபகார்த்த சுற்றுக் கேடயமாக சக் கோட்டை பங்குத்தந்தை அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இந்த உதைபந்தாட்ட போட்டியில் சக் கோட்டை, பங்கு 1ம் இடத்தையும், பருத்தித்துறை பங்கு, சாவகச்சேரி பங்கு, 2ம் 3ம் இடத்தை பெற்றுக் கொண்டன. இவர்களுக்கான வெற்றிக் கேடயத்தை செல்வன் கலிஸ் ராஜின் தாயார் உட்பட அவரது உறவினர்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

இவ் ஒன்று கூடலுக்கு சக் கோட்டை பங்குத்தந்தை பங்கு மக்கள் தமது தாராள ஒத்துழைப்பு உதவியை வழங்கிமை குறிப்பிடத்தக்கது. மேலும் ஒன்று கூடலுக்கு உதவி செய்த மனித முன்னேற்ற நடுநிலையத்தையும் நன்றியோடு நினைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலையாக தரமுயர்வு

யா/திருக்குடும்ப கன்னியர் மடம் 05-08-2010 முதல் தேசியப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த கத்தோலிக்க பெண்களுக்கு ஆங்கிலக்கல்வி புகட்டுவதற்காக 1845 இல் யாழ் ஆயராக இருந்த பெற்றாகினி என்பவரது வேண்டுகோளின் பெயரில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் ஒரு வீட்டில் ஒரு கல்விக் கூடம் ஆரம்பிக்கப்பட்டது. பெண்கள் செமினரி என அழைக்கப்பட்ட இக் கல்விச்சாலை அயர்லாந்தைச் சேர்ந்த திருமதி பினைகன் என்பவராலும் அவரது மகளாலும் நிர்வகிக்கப்பட்டு வந்தது. பின்னர் 1862 இல் ஆயராக இருந்த செமெரியாவின் அழைப்பின் பெயரில் பிரான்சிலிருந்து வருகை தந்த திருக்குடும்ப சபைக் கன்னியர்கள் இதனை பொறுப்பேற்றுக் கொண்டதுடன் தற்போதய வளாகத்தில் பாடசாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

1871 இல் பூர்த்தியாக்கப்பட்ட பாடசாலையின் முதல் அதிபராக நெலன் தாயார் நியமனம் பெற்றுக் கொண்டார். இதில் வசதியுடைய குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பை பெற்றுக்கொண்டனர். எனவே வசதி குறைந்த பிள்ளைகளுக்காகவும் அனாதைப் பிள்ளைகளுக்காகவும் வேம்படி வீதியில் ஓர் பாடசாலை திருக்குடும்ப கன்னியர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இது பின்னர் கன்னியர்மட மகாவித்தியாலயமாக வளர்ச்சி பெற்றது.

படிப்படியாக வளர்ச்சியடைந்த இப்பாடசாலை 1922 இல் முன்பள்ளி முதல் லண்டன் மெற்றிக்குலேசன் வரை வகுப்புகளைக் கொண்டிருந்தது. 1930களில் இப் பாடசாலையில் இருந்து பல மாணவர்கள் உயர்கல்விக்காக தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் சிலர் தமது பாடசாலைகளில் ஆசிரியராக நியமனமும் பெற்றுக்கொண்டனர்.

1951 இல் பாடசாலை அதிபராக ஜோசேப்பின் தாயார் பாடசாலையை பொறுப்பேற்றுக் கொண்டார். இளமையும் செயற்திறனும் சுறுசுறுப்பும் கண்டிப்பும் கொண்ட இவரது காலத்தில் பாடசாலை மிகவும் தரமான பாடசாலையாக முழு இலங்கையில் பரிணமித்தது.

1960 இல் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்துக்கொண்டபோது இப் பாடசாலை கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலையாக இயங்கத் தொடங்கியது. 1970 இல் வெளிநாட்டு சமயப் பிரசாரகர்கள் நாட்டை விட்டு வெளியேற நேரிட்ட போது சுதேச அதிபர்கள் பாடசாலையை பொறுப்பேற்றுக் கொண்டனர். முதலாவது சுதேச அதிபராக அருட்சகோதரி மாட்லினா நியமனம் பெற்றுக்கொண்டார். 1976 இல் இவர் மரணமடைய அருட் சகோதரி அன்ரனி ஜோசவ் அதிபரானார்.

1977 இல் பாடசாலையை நிர்வகிப்பதில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக பாடசாலையை அரசாங்கத்திடம் கையளிக்க நிர்வாகம் முடிவு செய்தது அப்போது பாடசாலை 1500 மாணவர்களையும் 48 ஆசிரியர்களையும் கொண்டிருந்தது.

1988 இல் பாடசாலையின் அதிபராக அருட் சகோதரி ஜோலண்ட் மத்தாயஸ் நியமனம் பெற்றார். யுத்த சூழல் காரணமாக ஏற்பட்ட பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து பாடசாலையின் கட்டுக் கோப்புக் குலையாமல் அதனை நிர்வகித்த இவரது காலத்தில் ஒரு முக்கிய நிகழ்வாக 2002 இல் கன்னியர் மடம் மகாவித்தியாலயம் இப்பாடசாலையுடன் இணைக்கப்பட்டது.

2004 இல் அருட்சகோதரி ஜோலண்ட் ஓய்வு பெற தற்போதய அதிபரான அருட் சகோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லாஸ் பாடசாலையை பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது காலம் மற்றும் ஒரு விதமான நெருக்கடியான சூழலைக் கொண்டிருந்ததாகும். நீண்டகால யுத்த வடுக்களுடன் கலாசார சீரழிவுக்குள் சிக்குண்ட மாணவர்களை வளர்த்தெடுப்பதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ள நிலமையில் நிதானம், கண்டிப்பு, தூரநோக்குடன் புதிய சவால்களுக்கு முகம்கொடுத்து, கல்வியிலும் ஒழுக்கத்திலும், ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகளிலும் பாடசாலையின் தரம் குன்றாமல் வளர்த்து நிற்கும் இவ்வேளையில், பாடசாலை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளமை, திருக்குடும்ப கன்னியர்மட அதிபர்களது அர்ப்பணிப்பு நிறைந்த சேவைகளுக்கு கிடைத்த பரிசு எனக்கூறின் அது மிகையாகாது.

இந்த நிகழ்வினை ஒட்டி கடந்த 30-09-2010 அன்று பாடசாலையில் ஒரு விழா முன்னெடுக்கப்பட்டது வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் G.A.சந்திரசிறி அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் கௌரவ விருந்தினர் ஆகவும் யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம். மாகாண மேலதியக் கல்விப் பணிப்பாளர் திரு.வே.தி.செல்வரெட்ணம். யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் வருகை தந்திருந்தனர்.

பாடசாலையின் ஆரம்பப் பிரிவு வாயிலில் ஆசிரியர்கள் புடை சூழ அதிபர் பிரதம விருந்தினர், ஆயர் அவர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு நாதஸ்வர மேள இசையுடன் பாடசாலை வாயில் வரை அழைத்து வரப்பட்டனர். பாடசாலை வளாகத்தினுள் பாடசாலை பாண்ட் வாத்திய அணியினர் அணிவகுப்பு மரியாதையுடன் அழைத்து சென்றனர். பின்னர் தேசியக் கொடியினை ஆளுனரும் பாடசாலைக் கொடியினை அதிபரும் ஏற்ற தேசிய கீதமும் தொடர்ந்து பாடசாலை கீதமும் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து விழா மண்டபத்தினுள் அழைத்து வரப்பட்ட விருந்தினர்களால் பாரம்பரிய முறைப்படி மங்கள விளக்கு ஏற்றப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற இறைவணக்கத்தில் அனைவரும் பக்தியுடனும் உணர்வு பூர்வமாகவும் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் மேடையில் அமர்த்தப்பட்ட பின்னர் அதிபர் அருட் சகோதரி மேரி தஸ்நெவிஸ் லடிஸ்லஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்று தனது தலைமையுரையை நிகழ்த்தினார்.

அவர் பாடசாலையின் வரலாற்றினை மிகவும் சுருக்கமாக குறிப்பிட்டு பாடசாலையை தேசியப் பாடசாலையாக தரமுயர்த்த மேற்கொண்ட முயற்சிகள் பற்றியும் அதற்காக ஆயர் அவர்கள் எடுத்த கரிசனை காரணமாக இன்று பாடசாலை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளமையை மிகவும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார். இதற்கான அனுமதியைப் பெற மேன்மை பொருந்திய ஜனாதிபதி அவர்களிடம் வேண்டுகோள் விடுத்த ஆயருக்கும் உடனடியாக அதற்கு அனுமதி வழங்கிய ஜனாதிபதி அவர்களுக்கும் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்த ஆளுனர் அவர்களுக்கும் வேண்டிய அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் அவ்வப்போது வழங்கி இன்று இப் பாடசாலை தேசியப் பாடசாலையாக தரமுயர்த்த உழைத்த குருமுதல்வர் அவர்களுக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

இவ்வேளையில் கடந்த 2005 முதல் 2010 வரையான காலப்பகுதியில் பாடசாலையின் சாதனைகள் சிலவற்றை முன்வைப்பது பொருத்தமானது எனக் கூறினார். ஒரு பாடசாலையின் தரத்தைக்காட்டும் சுட்டியாக அதன் கல்விப் பெறுபேறுகள் விளங்குகின்றன. கடந்த 5 வருடங்களில் இப்பாடசாலையின் க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகள் திருப்திகரமானதாக அமைந்துள்ளன. விஞ்ஞானப்பிரிவில் சராசரி 52% சித்தியும் வர்த்தகப்பிரிவில் 88% சித்தியும் கலைப்பிரிவில் 90% சித்தியும் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இவர்களில் 116 பேர் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளதுடன் வருடாந்தம் 20இற்கு மேற்பட்டோர் கல்வியியற் கல்லூரியிலும் அனுமதி பெற்று செல்கின்றனர் என்றும் அதிபர் குறிப்பிட்டதுடன் க.பொ.த.(சா.த) பரீட்சையில் சராசரி 71% சித்தியடைந்து வருவதுடன் ஆங்கில மொழிமூலமாக கற்கும் மாணவிகள் தொடர்ந்து 100% சித்தியடைந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும். சமூகத் தொடர்பாடலுக்கு ஆங்கில மொழித்தேர்ச்சி மிக அவசியமானதாகும். நாம் பல்வேறு யுத்திகளைப் பயன்படுத்தி மாணவர்களின் ஆங்கில மொழி அறிவை வளர்ச்சியடையச் செய்து வருகின்றோம். இதனால் தரம் 6 – 13 வரையான மாணவிகள் அனைவரும் ஆங்கிலத்தை பேசுகின்றனர்.

எமது மாணவர்கள் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக ஆங்கில தினப்போட்டிகள் ஆங்கில கவிதை நாடகம் உரை நாடகம் போன்றவை இதற்கு சான்றாகும். 2006 எமது மாணவி தேசிய மட்டத்தில் நடிப்புக்கான முதல் இடத்தை பெற்றுக்கொண்டதுடன் 2007, 2008 ஆண்டுகளில் எமது ஆங்கில நாடகம் தேசிய மட்ட போட்டிகளில் பங்கு பற்றும் தகுதியும் பெற்றது. யுத்த சூழ்நிலையால் 2007 இல் தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்ள முடியவில்லை. 2008 க்கான தேசியமட்டப் போட்டி 2010 இல் கொழும்பில் நடை பெற இருக்கின்றது. இதில் மாணவிகள் பங்குபற்ற தம்மை தயார்படுத்திக் கொண்டு வருகின்றனர்.

அழகியல் துறையில் எமது பாடசாலையின் நடனம் இசை நாடகம் நாட்டுக்கூத்து சித்திரம் போன்றவை சிறந்த படைப்புக்களாக வெளிப்படுவதுடன் பல தரங்களில் வெற்றிகளை பெற்றதுடன் சபையினரின் மனதையும் ஈர்த்துக்கொண்டனவாக விளங்குகின்றன. நாட்டுக்கூத்து தொடர்ந்து மாகாண மட்டத்தில் 5 தடவைகள் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுத்துறையில் எமது பாடசாலை பல சாதனைகள் புரிந்துள்ளது. 1937 இல் எமது மாணவிகள் தேசிய போட்டிகளில் கலந்துகொண்டு மேசைப் பந்து , ரெனிஸ் , ரெனிகுயிற, ஆகிய போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்றுள்ளனர். 1973இல் எமது வலைப் பந்தாட்ட அணி தேசிய மட்டத்தில் முதலை இடத்தைப்பெற்றது. 2005 தொடக்கம் 2010 வரை எமது கூடைப்பந்தாட்ட அணியினர் தொடர்ந்து தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

எமது பாடசாலை கல்வியுடன் மாத்திரம் நின்றுவிடாமல் சமூகத்திற்கு பொருத்தமான பிரசைகளையும் உருவாக்குகின்றமை குறிப்பிடத்தக்கது. கல்வி நிர்வாகம் பாடசாலையின் பழைய பாரம்பரியங்களையும் கட்டிக்காத்து வருகின்றது. எமது மாணவர்கள் எதிர்காலத்தில் தமது சொந்தக்காலில் நிற்கும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் எமது மாணவர்கள் அரச அரச சார்பற்ற நிலையங்களில் உயர்ந்த பதவிகளை இன்று அலங்கரித்து வருகின்றனர்.

இன்று எமது பாடசாலை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்ட அதே வேளை சில சிக்கல்களுக்கும் முகம்கொடுக்க நேரிட்டுள்ளதை குறிப்பிட வேண்டும் பாடசாலையில் ஏற்படும் பௌதிக , ஆளணி , வளப் பற்றாக்குறைகள் நீங்குவதற்கு பெற்றோர் பழைய மாணவர்கள் கூடிய அக்கறை செலுத்துவதுடன் ஆசிரியர்கள் அனைவரும் அதன் உயர்வுக்காக அயராது உழைக்க வேண்டும். இன்றும் எமது பாடசாலையில் வைபவங்களின் போது ஒன்றுகூடுவதில் ஒரு பொது மண்டபம் இல்லாதது பெரும் குறைபாடாக உள்ளது. இதற்கான நடவடிக்கைகள் தொடர்வதற்கு இங்கு சமூகமளித்துள்ள பிரமுகர்கள் வழிசெய்ய வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆளுனர் மேஜர் ஜெனரல் G.A.சந்திரசிறி அவர்கள் நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ள இப் பாடசாலை கடந்த காலங்களில் நாட்டில் பல முதலிடங்களைப் பெற்ற முன்னணிப் பாடசாலையாகத் திகழ்ந்துள்ளது. இங்கு கல்வி கற்ற பழைய மாணவிகள் இன்று உயர்ந்த பதவிகளில் காணப்படுகின்றனர். இந்நிகழ்வு யாழ்ப்பாண கத்தோலிக்க மாணவர்களுக்கு கத்தோலிக்க பின்னணியுடன் கூடிய சூழலினைக் கொண்ட தேசியப் பாடசாலையின் கல்வியைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றுத்தந்துள்ளது. நீண்டகால இன்னல்கள் மறைந்து அமைதியான சூழல் ஒன்று உருவாகியுள்ள இவ் வேளையில் பெற்றோர்களும் தற்போதுள்ள ஆசிரியர்களும் இச் சந்தர்ப்பத்தை பற்றிப்பிடித்து கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்த அறிவுள்ள மாணவர்களை உருவாக்கி இழந்தவைகள் அனைத்தையும் மீளப் பெற்றுக் கொள்ள பொறுப்புடன் செயற்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

ஆயர் அவர்கள் தமது உரையில் யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க பெண்களின் கல்விக்காக உருவாக்கப்பட்ட இப் பாடசாலை தேசியப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட வேண்டும் என 1998 முதல் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது நிறைவேறாமல் போனது பற்றிய குறை மனதில் இருந்தமை காரணமாக நாட்டின் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் தன்னை சந்தித்த வேளையில் தான் இவ் வேண்டுகோளை சமர்ப்பித்த போது அவர் அதை ஏற்றுக்கொண்டு அதற்கான ஆணையை அருகில் இருந்த தற்போதய வடமாகாண ஆளுநரிடம் பிறப்பித்ததையும் பின்னர் தன்னை சந்திப்பதற்காக வருகை தந்த ஜனாதிபதியின் மனைவியிடம் இதுபற்றி குறிப்பிட்ட வேளையில் தானும் ஓர் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கல்வி கற்றவர் எனக் கூறி திருக்குடும்ப கன்னியர்களது கல்விச் சேவையை நன்றியுடன் நினைவு கூர்ந்ததையும்

(தொடர்ச்சி 7ம் பக்கம் பாரக்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் யோசவாஸ் அடிகளாரின் விண்ணக வாழ்வின் மூன்றாம் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை ஆயர் பேரவை விடுக்கும் சுற்றுமடல்

(சென்ற இதழ் தொடர்ச்சி)



**அருளாளர் யோசவாஸ்: உரையாடலினதும் ஒன்றிப்பினதும் மனிதர்:**

2ம் வத்திக்கான் சங்கத்திற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்பாகவே அருளாளர் யோசவாஸ் அடிகளார் ஒரு உரையாடலின் மனிதனாக திகழ்ந்ததை நாம் காணலாம்.

திருச்சபைக்கும் உலகிற்கும் இடையான உரையாடல், மதங்களுக்கும் பண்பாடுகளுக்குமிடையான உரையாடல், ஏழைகளுடனான உரையாடல் என்பன இன்று திருச்சபையின் பணியின் முக்கிய பரிமாணங்களாகக் காணப்படுகின்றன. இறைவனின் பணியாளனான திருத்தந்தை 2ம் யோவான் போல் அவர்கள் "ஆசியாவில் திருச்சபை" என்கின்ற தனது மன்றுக்கு பின்னான திருத்தூதர் அறைகூவலில் பின்வருமாறு கூறுகின்றார். "உரையாடலுக்கான ஆர்வம் என்பது வெறுமனே மக்கள் மத்தியில் சமாதானமாக வாழ்வதற்கான ஒரு வழிமுறையல்ல; மாறாக அது திருச்சபையின் பணியின் ஒரு உள்ளார்ந்த கூறு ஏனெனில் அது தந்தையாகிய இறைவன் தூய ஆவியின் ஆற்றலால் தனது திருமகனின் ஊடாக மனித குலத்தோடு மேற்கொள்ளும் ஒரு மீட்புக்கான அன்பு உரையாடலில் ஊற்றெடுக்கின்றது. (ஆசியாவில் திருச்சபை 29) அருளாளர் யோசவாஸ் அடிகள் எல்லா மட்டங்களிலுமான உரையாடல் நற்செய்தி அறிவிப்பிற்கு அவசியமானது என்பதைப் புரிந்து கொண்டிருந்தார். பாரம்பரிய சமயங்கள் மட்டிலும் தொன்மையான பண்பாடுகள் மட்டிலும் அவர் நேரடி அனுபவத்தைக் கொண்டிருந்தார். எமது கண்டத்தில் பெரும்பான்மையான மக்கள் பொருளாதார ரீதியில் ஏழைகள் என்பதை அவர் ஆழமாக உணர்ந்திருந்தார்.

ஏனைய மதங்களில் பொதிந்திருக்கும் உண்மைகளை 2ம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபை பற்றிய மறைக்கொள்கைத் திரட்டு முதன் முதலாக உத்தியோக பூர்வ ஆவணத்தில் ஏற்றுக் கொண்டது. "ஏனைய மதங்களில் காணப்படும் உண்மையும் நன்மையுமான விடயங்கள்' அனைத்தும், இறுதியில் அனைவரும் வாழ்வு பெறும்படி எல்லோரையும் ஒளிர்விக்கும் இறைவனாலேயே நற்செய்திக்கான ஆயத்தமாக வழங்கப்பட்டது என்றே திருச்சபை கருதுகின்றது." (திருச்சபை 16) இத்தகைய நேர்மயமான அணுகு முறை ஏனைய மதங்களைப் பொறுத்த வரையில் காட்டப்படாத ஒரு பின்னணியில் இருந்துதான் யோசவாஸ் அடிகளார் வருகிறார். சமய சமரசத்தைத் தவிர்த்தவராக ஏனைய மதத்தவரோடு யோசவாஸ் அடிகளார் உரையாடல் மேற்கொண்ட விதமானது உண்மையிலேயே தீர்க்கதரிசனமானது.

ஏற்கனவே சொன்னது போல அவருடைய தூய வாழ்வுதான் தம்மோடு தொடர்பு கொண்ட அனைவருடைய நன் மதிப்பையும் அவருக்குத் தேடித்தந்தது. ஏழைகளுடனான அவருடைய உரையாடல் உண்மையிலேயே குறிப்பிடத்தக்கது. அவர் ஒதுக்கப்பட்டோரோடும், ஏழைகளோடும் தொடர்ச்சியான தொடர்பில் இருந்தார். நற்செய்தி அறிவிப்பின் முக்கிய பரிமாணம் ஒன்றைக் கோடிட்டுக்காட்டும் அழகிய பந்தி ஒன்று 'ஆசியாவில் திருச்சபை' எண் 11" காணப்படுகின்றது.

"மறக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட ஏழைகளோடு மிக நெருக்கமாக இருந்த இயேசு, இறைவன் அவர்களுடன் இருப்பதால் அவர்கள் ஆசி பெற்றவர்கள் என்றார். பாவிகளோடு உணவுண்ட அவர் தமது பாவ வழிகளிலிருந்து அவர்கள் மனம் திரும்பி இறைவனிடம் வந்தால் தந்தையுடைய விருந்தில் அவர்களுக்கும் இடம் உண்டு என்று உறுதி வழங்கினார். தீண்டத்தகாதவர்களைத் தீண்டியதன் மூலமும் அவர்கள் தன்னைத் தொட அனுமதித்ததன் மூலமும் கடவுள் அவர்களுக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார் என்பதை உணரச் செய்தார். அவரது இறந்து போன ஒரு நண்பனுக்காக அழுதார். இறந்து போன ஒரு மகனை உயிர்ப்பித்து விதவைத் தாயிடம் ஒப்படைத்தார். சிறுவரை வரவேற்றார். தம்முடைய சீடர்களின் பாதங்களைக் கழுவினார். இறைவனுடைய இரக்கம் இதைவிட நெருக்கமாக எப்போதுமே கிட்டியதில்லை. அருளாளர் யோசவாசின் வாழ்விலும் பணியிலும் தெளிவாக வெளிப்படும் உரையாடலுக்கான பிரகடனமும் இதுவாகவே இருந்தது. ஏழைகள் மட்டிலான அக்கறையின்றி நற்செய்தியறிவிப்பு சாத்தியமற்றது என்பதை அவர் ஆழமாக உணர்ந்திருந்தார்.

அரசன் முதல் ஆண்டிவரை எல்லோருடனும் உரையாடலில் ஈடுபட அவரால் முடிந்தது. தன்னுடைய சக பணியாளர்களை கடினமான நற்செய்தி அறிவிப்புப் பணியிலே திடப்படுத்தி உற்சாகப்படுத்துவதில் உரையாடலின் ஒரு வகைமாதிரியாகவே அவர் திகழ்ந்தார். தான் அவர்களுடைய மேலாளராய் இருந்த போதிலும் அவர்கள் தன்னிடம் வரவேண்டும் என்று எதிர்பார்க்காமல் தாமே அவர்களை ஒழுங்கு முறையில் சென்று சந்திப்பார். கடின மனம் கொண்ட பாவிகள் மற்றும் கிறிஸ்தவத்தை மறுதலிப்பவர்கள் மட்டிலும் கூட அவருடைய தாழ்மையான உரையாடல் அணுகுமுறையே இறுதி வெற்றி தந்தது.

ஆகவே அருளாளர் யோசவாஸ் ஒரு ஒன்றிப்பின் மனிதனாக துலங்குகின்றார். ஒன்றிப்பும் பணியும் இணைந்தே பயணிக்கின்றன என்பதை நாம் இன்று அறிவோம். மணவாளனாக கிறிஸ்துவை திருமுழுக்குப் பெற்ற அனைவரோடும் இணைக்கும் ஒன்றிப்பின் பந்தனமே திருச்சபையின் மறை பொருளின் மையமாக உள்ளது. (ஆசியாவில் திருச்சபை 24) அருளாளர் யோசவாஸ் மூவொரு இறைவனின் ஒன்றிப்பிலே ஆழமாக வேரூன்றி இருந்தார். அந்த ஒன்றிப்பு திருமுழுக்கிலே கிறித்துவ வாழ்வைப் பெற்றுக் கொள்கின்றவர்கள் என்ற அடிப்படையில் கிறிஸ்தவ குழுமத்திலுள்ளும் நிறைய வேண்டும் என்பதை அவர் நன்றாக அறிந்திருந்தார். பொதுநிலைத் தலைமைத்துவத்தோடு சிறிய கிறிஸ்தவ குழுமங்களைக் கட்டியெழுப்பும் அவருடைய அணுகுமுறையும் தீர்க்கதரிசனம் மிக்க ஒரு நற்செய்தியறிவிப்பு முறையே.

தாம் இங்கு வந்த போது ஒரு பொதுநிலையினருடைய திருச்சபையைக் கண்ட அருளாளர் யோசவாஸ் விசுவாசத்தை ஆழப்படுத்தவும், வளர்க்கவும் பொதுநிலையினரை நம்ப முடியும் என்பதைக் கண்டு கொண்டார். அவர்களை சிறிய கிறிஸ்தவ குழுமங்களாக ஒழுங்கமைத்தார். துன்புறுத்தல்கள் மத்தியிலும் குருக்களற்ற நிலையிலும் பொதுநிலையினரே மறைக்கல்வி ஊட்டியும், கிறிஸ்தவ வாழ்வை வளர்த்தும் வந்தனர். ஆகவே நற்செய்தி அறிவிப்பு என்னும் பொதுப் பணியில் பொதுநிலையினர் துறவிகள், திருநிலையினர் ஆகியோர் ஒருவரை ஒருவர் சகோதர சகோதரிகளாக ஏற்றுச் செயற்படும் பங்கேற்புத் திருச்சபையை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்பதற்கான முன்னுதாரணத்தை யோசவாஸ் அடிகளாரே தந்துள்ளார். தன்னுடைய மேலாளர்களுடனான தொடர்புகளில் அவருடைய இந்த ஒன்றிப்பின் போக்கைக் காணலாம். பற்றுவாடோவுக்கும் நற்செய்தி அறிவிப்பு ஆணையத்திற்கும் இடையிலான முரண்பாட்டிலும் ஒற்றுமையையும், மீள் இணைக்கப்பட்டையும் ஏற்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை.

**அருளாளர் யோசவாஸ் இணையற்ற ஆர்வம் கொண்ட உண்மை ஆயர்:**

தன்னுடைய ஆடுகளுக்காக உயிரையே கொடுக்கும் நல்லாயனாக இயேசு தம்மை அறிவித்தார்.

(தொடரும்)

# ......... வளமாகும் குடும்ப வாழ்வு .........

## குடும்பப் பக்கம்

(தொடரும்....)

**அருட்பணி எஸ்.ஜே. இராஜநாயகம்**

### பிரச்சனைகளைத் தீர்த்தல்



ஒரு மனிதன் வாழ்வில் பல பிரச்சனைகளைச் சந்திக்கின்றான். வாழ்வில் வெற்றியடைபவர்கள் எல்லோரும் பிரச்சனைகள் இல்லாதவர்கள் என்று சொல்ல முடியாது. ஏனெனில் நாம் எல்லோரும் பிரச்சனைகளுடன் எல்லோரும் பிரச்சனைகளைத் தீர்ப்பவர்களாகவே இருக்கின்றார்கள். நாம் பாவிப்பதில்லை. எமது கடந்தகால அனுபவத்தைக் கொண்டும், இயல்பாக எமக்குள்ள அதிகாரங்களைக் கொண்டும்தான் பிரச்சனைகளைக் கையாண்டு தீர்க்கின்றோம்.

வாழ்வில் வரும் பிரச்சனைகளைத் தீர்க்கும் திறனை விருத்தி செய்ய திறனாய்வுச் சிந்தனைத் திறனை (Critical Thinking) கூர்மைப்படுத்த வேண்டும். இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு (Halpern 1998) திறனாய்வுச் சிந்தனையைப் பல வழிகளில் உயர்த்தலாம். அதன் முதற்படி ஊக்கி (Motivation) சார்ந்ததாக இருக்கின்றது. இதன் அடிப்படையாக அறிகை வேலைகளில் ஒருவர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள ஆர்வமுடையவராக இருத்தல் வேண்டும். இதற்கு நேரம் செலவாகும். பிரச்சனைக்குத் தீர்வு எமது மூளையிலிருந்து உடனடியாக எழுதுகின்றது. ஆனால் அந்தத் தீர்வை உடனடியாக கைக்கொள்வதை விடுத்து, பிரச்சனையை கவனமுடன் சிந்தித்து அவற்றை திறனாய்வு செய்தல் நல்லது. பிழையான தீர்வுகளிலிருந்து எம்மை விடுக்க தீர்வுகளின் விளைவுகளைத் தோண்டி எடுத்துப் பார்ப்பது பெரு முயற்சியாகும். நாம் வாழ்வில் பிழையான தீர்மானங்களால் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து எம்மை விடுவிக்கப் பெரு முயற்சி எடுக்கின்றோம். பிழையான முடிவுகளால் ஏற்பட்ட விளைவுகளை நேர்சீராக்க மிகவும் கஷ்ரப்பட்டு உழைக்கின்றோம். இதற்குச் சில வேளைகளில் எமது வாழ்வு முழுவதையும் செலவு செய்கின்றோம்.

அடுத்த படியாக பிரச்சனை எது என்பதை இனம் காணுதல். இது ஒரு முக்கியமான படியாகும். இங்கு கேள்விகள் கேட்டல் மிகவும் பலன் தரவல்லது. ஐசக் நியூட்டன் என்பவர், ஏன் மரத்திலிருந்து அப்பிள் பழம் கீழே விழுகின்றது? என்ற கேள்வியைக் கேட்டு, நீராவியால் இயங்கும் பல இயந்திரங்களை உருவாக்கினார். இப்படியாக ஏன்? என்ன? எப்படி? என்ற கேள்விகள் கேட்கப்பட்டதனால் இன்று விஞ்ஞானத்தில் உலகம் முன்னேற்றமடைந்திருப்பதை நாம் பார்க்கின்றோம். எனவே கேள்விகள் கேட்டல் ஆக்கபூர்வமானதாகக் காணப்படுகின்றது. பிரச்சனைகளை எது என்று இனம்காண கேள்விகள் கேட்டல் மிகவும் நல்லது. இந்தக் கட்டத்தில் கூடிய நேரம் செலவு செய்வது கூடிய நன்மை பயக்கும். ஏனென்றால் பிரச்சனை எது என்று இனம் கண்டால் பிரச்சனைகளைத் தீர்ப்பது எளிதாகும். எல்லா வாழ்வுப் பிரச்சனைகளும் இலகுவானதல்ல.

சில பிரச்சனைகள் பல்கூட்டானவை (Complex). எல்லாப் பிரச்சனைகளையும் இரு வேறு வழிகளில் இனம் கண்டு பிரித்தல் மிகவும் நல்லது. இதனால் ஒரு பிரச்சனையை ஒன்றுக்கு மேலாக சிந்தனை செய்யத் தூண்ட வைக்கும். இது ஏனைய வழிகளைவிட திறமையாக பிரச்சனையைத் தீர்க்க வழிசமைக்கின்றது எந்தெந்த வகையாக பிரச்சனையை இனம் காணுகின்றோமோ அவைகள் வெவ்வேறு தீர்மானங்களை எடுக்க உதவி புரியும். பிரச்சனையைவிட பிரச்சனையை இனம் காணுவது மிகவும் முக்கியமானதாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்

## தாய், தந்தை, ... கிறிஸ்து

அம்மா என்று சொல்லிப்பார்
அது உன்னை தாலாட்டும்
அப்பா என்று சொல்லிப்பார்
அது உன்னை போற்றும்
அண்ணா என்று சொல்லிப்பார்
அது உன்னை பராமரிக்கும்
தம்பி என்று சொல்லிப்பார்
அது உன்னை மெய்யெழுப்பும்
தங்கை என்று சொல்லிப்பார்
அது உன்னை தக்கவைக்கும்
கிறிஸ்து என்று சொல் அவர்
எம்மை வாழ வைப்பார்



ஆ. சிறோன்டெல்மன்
புனித யாகப்பர் ஆலயம்,
இளவாலை.

## இறையவனோடு பேசு

உன்னில் கலந்து உன்னுள் உறைந்து
உன்னத்துள் பேசவல்லவர் என்றும்
உன்னை அன்பு செய்யும் இறைவன்தானே!
உன் வாழ்வின் உன்னத சக்தியும் அவரே!



அன்றாடம் சில மணித் துளிகள்
அமைதியாய் அவர் பிரசன்னத்தில்
அமர்ந்திருந்து நீ பேசு...
உள்ளத்தைத் திறந்து பேசு.

நெஞ்சில் நிறையும் நன்றிகளை,
நெஞ்சத்துள் எழுகின்ற பாடல்களை,
செபமாக்கி ஒப்புக் கொடு.
உன் தேவைகள், கவலைகள்,
உன் ஏக்கங்கள், அச்சங்கள்,
உன் சோதனைகள், மனச் சூழ்ச்சிகள்,
நீ விடுகின்ற தவறுகள், புரியும் குற்றங்கள்,
எல்லாமே பேசு, எதையும் மிகைக்காதே.

இருண்ட உன் வாழ்வில் ஒளி நிதம் பிறக்கும்,
தெளிவான பாதை பல உன் முன்னே தோன்றும்,
கவலையும் துன்பமும் புகைபோல மறையும்,
நம்பிக்கையோடுகூட மனத்தெளிவும் வளரும்,
தவறுகள் மறையும் புனிதங்கள் வளரும்,
திருந்திடும் ஆவல் அனைவிலும் பெருகும்,
துன்பம் தரும் பிரச்சினைக்கு தீர்வும் தோன்றும்,
அமைதியும் தெளிவும் நெஞ்சத்தை நிறைக்கும்.
அக்கணமே உன் வாழ்வின் இசையாகும்.

## அழைப்பு



"அழைப்பு என்பது இறைவனால் எமக்கு
தரப்பட்ட தனிக்கொடை
அவர் நம்மை பெயர் சொல்லி அழைக்கிறார்
அதற்கு செவிமடுப்பது என்னுடைய பொறுப்பு
மற்றவருக்காக நான் துறவறத்தை தெரிந்தெடுப்பது
அல்ல மாறாக என்னுடைய முழு மன
விருப்பத்தோடு தெரிந்து கொள்ள வேண்டும்
அப்போது தான் என்வாழ்வில் நடக்கின்ற
எல்லாத் துன்பத்தையும் ஏற்றுக்கொள்ளக்
கூடிய தன்மை என்னில் இருக்கும்
துறவற வாழ்வுக்கு செபம் தான் அத்திவாரம்

வாழ்க்கையின் பலகட்டங்களில்
இறைவன் எம்மோடு இருக்கிறார்
என்பதை மறந்த விடக்கூடாது."

ஆக்கம்: லேரி அஜித்தா
O/L செல்/அன்னாவின்
பாசையூர்.

## அருளும் திருவும் பெற்ற ஆண்டகயே! வாழ்த்துகின்றோம்!

அருளும் திருவும் பெற்ற ஆண்டகையே அகத்தாய் பெருகும் உவகையுடன்
யாழ்மக்கள் நெஞ்சமெல்லாம் உருகியே வாழ்த்துகின்றோம். வாழி நீ வாழி நீடு!
இலங்கையின் இரண்டாம் கர்தினால் என்னும் அந்தப் பெருமையில் நாம் மிதக்கப்
பேரருள் கிடைக்கப்பெற்றாய் அருமையாம் இந் நிகழ்வு ஆசியா பெற்ற நவம்
ஆண்டகையே! மல்கம் ரஞ்சித்! தந்தையே! தாங்கள் பெற்ற எல்லாப் புகழும்
அந்த இறைவனுக்கே உரித்தாகும்

"நாவாலியூர் நாயகி"

## சிறுவர்களை நற்பண்புகளில் உருவாக்க வேண்டியவர்கள் பெற்றோர்களும் பெரியோர்களுமே!

அருட் சகோ. ஜெரோம் அ.ம.தி

ஒவ்வொரு குழந்தையும் ஒரு புதிய யுகத்தை படைக்க, புதிய வரலாற்றை எழுத பிறந்த இறைவனின் படைப்பு என்றால் மிகையாகாது. 'குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று' என்று குழந்தையை கடவுளோடு இணைத்துப் பார்க்கும் கலாச்சாரப் பண்பாட்டில் வளர்க்கப்பட்டவர்கள் நாம். 'இறைவனது ஞானத்தை, திருவுளத்தை, வெளிப்பாட்டைப் பெறும் பேறுபெற்றவர்கள் குழந்தைகளே' என்ற இயேசு ஆண்டவரின் வார்த்தை விசுவாசத்தில் வேரூன்றி மறுகிறிஸ்துக்களாக வாழ அழைப்புப் பெற்றவர்கள் நாம். எமது வாழ்வுப்பணியில் சிறுவர்களோடு இரண்டறகலந்து வாழும் நாம் பெற்றோராக, ஆசிரியர்களாக, ஆன்மீக வழிகாட்டிகளாக, சமுதாயப்பெரியோராக, அவர்கள் மட்டில் எமக்கிருக்கும் பொறுப்புக்கள் என்ன என்பதுபற்றிச் சிந்திப்பது ஒவ்வொரு கிறிஸ்தவனினதும் தார்மீகப் பொறுப்பாகவுள்ளது.

இறைவனது பார்வையிலே குழந்தைகள் விலைபெறப் பெற்றவர்கள், மதிப்பு மிக்கவர்கள், இறைவனது உருவிலும், சாயலிலும் படைக்கப்பட்டவர்கள் (தொ.நூ 1:26-27). மனித சமுதாயத்தின் மணிபோன்றவர்களே குழந்தைகள் (நீமொ 17:6) என்று விவிலியத்திலே குழந்தைகள் போற்றப்படுவதை காணலாம். கடவுளோடும், கடவுளாகவும், இருந்த வார்த்தையான இயேசு (யோவா 1:1); சுடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிராமல் மனித அவதாரம் எடுக்க (பிலி 2:6-7) குழந்தையாக பிறந்தார். தன்னிடம் வந்த குழந்தைகளை பாசத்தோடு அழைத்து, அன்பு காட்டி அரவணைத்து, தம் கரங்களை அவர்கள் மேல் பதியச்செய்து ஆசீர்வதித்தார் இறைமகன் இயேசு. (மாற் 10:13-16). விவிலியம்தரும் இறைவார்த்தையில் விசுவாசம் கொண்டு எம் வாழ்வை அமைத்துள்ள நாங்கள் ஒவ்வொருவரும் குழந்தைகளை மாண்போடு உற்றுநோக்கவும், மதிப்போடு நடத்தவும், பாசத்தோடு பராமரிக்கவும் பொறுப்புள்ளவர்களே!

தாய் தந்தையின் மடியில் கொஞ்சிக் குலாவும் குழந்தைப் பருவத்திலேதான் நல்லொழுக்கம் வித்திட்டு வளர்ச்சி பெறும். அன்றாட வாழ்வில் பெற்றோர் காட்டுகின்ற மாதிரிகையான வாழ்க்கையே மழலையின் மனதில் பதிந்து விடுகிறது. வளரும் குழந்தை தன் வாழ்வில் அதனையே பிரதிபலிக்கிறது. தீயதை விலக்கி, வன் சொல்கைற்றி, இனியவை பேசி, நல்ல பாதையைக் குழந்தைகளுக்கு காட்டுகின்ற போதுதான் அவை நற்குணசீலராக சமுதாயத்தின் தலை தூக்கும், என்றார் செந்நாப் போதகர். குழந்தைகள் கற்க வேண்டியவற்றைக் கற்று, கடமையுணர்வைப் பெற்று, பெற்றோரையும் உற்றோரையும், மற்றோரையும் மதித்து வாழ்வதற்கு, பெற்றோர்களின் வாழ்வும் அவர்களின் வழிகாட்டலுமே படிக்கற்களாக அமைகின்றன. மாறாக குழந்தைகள் தீயவழி ஒழுகி, ஒழுக்கம் தவறி பிற்காலத்தில் சமுதாயக் கட்டுக் கோப்புக்களை மீறி, தனக்கும் சமுதாயத்திற்கும் அழிவை ஏற்படுத்துவதற்கும் பிரதான காரணகர்த்தாக்கள் என்றால் அதுவும் பெற்றோரையே சாரும். கெட்ட பேச்சுகள், கெட்ட நடத்தைகள், துஷ்டத்தனமான செய்கைகளை பெற்றோர் மற்றும் அயலில் வாழும் பெரியோர் நம் வாழ்வில் கொண்டிருக்கும் போது வளரும் சிறுவர்களும் அதனைத் தன்னில் அப்படியே பிரதிபலிக்கிறது, வளர்த்துக்கொள்கிறது, பிரயோகிக்க முற்படுகிறது.

மதுப் பழக்கத்திற்கும் புகைக்குப் பழக்கத்திற்கும் அடிமைப்பட்டுள்ள ஒரு குடும்பத்தலைவனது சீர்கெட்ட வாழ்வு, குழந்தையின் உள்ளத்தில் முளைத்து, வேரூன்றி நாளை வரும் அதைச் செய்யத் தூண்டுகிறது. அது மட்டுமன்றி தன் உற்ற மனைவி அருகிருக்க மாற்றான் மனை தேடி இச்சை வளர்க்கும் குடும்பங்களில் ஒழுக்கம் சீரழிகிறது. இதனால் அமைதி குலைகிறது. அமைதியின்மையால் குழந்தைகளின் எதிர்காலம் இருண்டுக் கேள்விக்குறியாக்கப்படுகிறது. இச்சூழ்நிலையில் வளரும் குழந்தை வெறுப்பும், விரக்தியுணர்வுமுடைய மனிதனாக வளர்ச்சி பெற்று, தீச்செயல்களில் இறங்கக் கூடிய நிலைக்கு ஆளாகிறது. தங்கள் பிள்ளைகளை அன்பால் அணைத்து, பாசமுடன் கண்ணோக்கி, நேசக் கரம் நீட்டாமல், அவர்களது மனநிலைகளைப் புரியாமல், அவர்களது சிறு விருப்பங்களுக்கு முக்கியம் கொடுக்காமல், அவர்களது உணர்வுகளைப் புரியாமல் வாழும் பெற்றோர் மற்றும் பெரியோர்கள் மட்டில் பிள்ளைகளுக்கு வெறுப்பும், அவமரியாதையும் ஏற்படுவது மட்டுமல்லாமல் பிள்ளைகளின் மனோ வளர்ச்சி குன்றி எதிர்காலம் கேள்விக்குறியாகிறது. இந்நிலையில் சிறுவர்களை நற்பண்புகளில் வளர்த்தெடுக்கும் பொறுப்புடையவர்களாக பெற்றோர்களும் பெரியோர்களும் செயற்பட வேண்டியது கட்டாய கடமையாகிறது.

இன்று சிறுவர் துஷ்பிரயோகங்கள் நிறைந்து சிறுவர்களின் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகங்களையே நாம் காணமுடிகிறது. சிறகடித்துப் பறந்து ஆனந்தம் காணவேண்டிய சிறுவரெல்லாம் முகமலர்ச்சியற்று மூலையிலே முடங்கிக்கிடக்கும் நிலைதான் ஏனோ? பள்ளியிலே புள்ளிபெற்று தன் வாழ்வை உயர்த்த உத்வேகத்துடன் பயணிக்க வேண்டிய சிறுவர் எஞ்சிய கஞ்சிக்கு கோப்பை ஏந்தி, வீதியிலே தஞ்சம் புகும் அவலம்தான் ஏனோ...? இந்நிலைக்கும் யார் பொறுப்பு? "சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்..." என்ற இயேசுவைப் போல சிறார்களை அழைத்து அன்பு செய்ய, நல்மாதிரி காட்ட, சகோதரத்துவத்தை கட்டியெழுப்பி புதுவுலகை அமைத்திட கிறிஸ்தவனே! கிறிஸ்தவனே! நீ தயாரா...? மனுக்குலமே புறப்படுவோம் சிறுவர்களை காத்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்







7ம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் : யோசப்பிலிப்
மண்ணில் :1929-09-27
விண்ணில் :1993-10-28

4ம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் : யோசப்பிலிப் அலோசியஸ்
மண்ணில் :1949-04-26
விண்ணில் :2007-12-17

7ம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் : அ.யுஸ்ரேனியாஸ் லோறன்ஸ்
மண்ணில் :1999-08-13
விண்ணில் :2003-09-08

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 31-10-2010 காலை 6 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

243, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். T.P. 0212223302 Advt-82/10 - குடும்பத்தினர் -



# 7ம் வருட நினைவு தினம்



பிறப்பு 01-09-1943
இறப்பு 03-11-2003

"நான் அவர் அருகில் அவருடைய சிற்பியாய் இருந்தேன். நாள் தோறும் அவருக்கு மகிழ்ச்சியூட்டினேன்; எப்போதும் அவர் முன்னிலையில் மகிழ்ந்து செயலாற்றினேன்."

(நீதி. 8:30)

பிரகாசம் குணமணி அடைக்கலம்

குடும்பத்தினர்
திரு. க. அடைக்கலம்
இல. 73 கதிர்றல் வீதி,
யாழ்ப்பாணம்.

Advt-83/10


- இறந்துவிடுவோமோ என்று அஞ்சுவதை விட இறந்தபின் இறைவனை விட்டுப் பிரிந்து விடுவோமோ என்பதை நினைத்து அஞ்சு.
- துன்பங்களால் நாம் கண்ட பயன் என்ன? இறைவன் ஒருவரே எங்கள் உதவி என்ற உண்மையைக் கண்டோம்.

## யாழ் திருக்குடும்ப..... (4ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார். இன்னும் இன்று இப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் முன் ஒரு பெரும் பணி ஒப்புவிக்கப் பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார். பாடசாலையின் தரம் உறுதிப் படுத் தப்படுவதில் ஆசிரியர்கள் அக்கறை யுடனும் பொறுப்புடனும் அர்ப்பணிப் புடனும் செயலாற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து பாடசாலையின் பழைய மாணவர் சங்க உப தலைவியும் பாடசாலையின் சிரேஸ்ட இளைப் பாறிய ஆசிரியையுமான செல்வி வயலற் இம்மானுவல் அவர்கள் உரையாற்றினார். இவர் பாடசாலை யின் வரலாற்றினை ஆரம்பம் முதல் இன்று வரை மிகவும் தெளிவாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் கூறி இன்று இப் பாடசாலை தேசியப் பாடசாலை யாக தரமுயர்த்தப்படுதவற்கு இப் பாட சாலையில் தமது கடின உழைப்பை வழங்கிய வழங்கிய பழைய அதிபர்கள் ஆசிரியர்கள் பழைய மாணவர்களை யும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார். பாடசாலை தனது வரலாற்றின் தனது 148வது வருடத்தை தொட்டு நிற்கும் இவ் வேளையில் பாடசாலையின் தர முயர்வு கடவுளின் அருள் நிறைந்த வழிகாட் டலினால் கிடைத்ததொன்றாகும். தொடர்ந்தும் இறை அருளுடன் இப் பாடசாலையின் பணி சிறக்கும் எனக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆங்கிலப் பாடல்களும் பரதநாட்டிய நிகழ்வுகளும் அனைவரது மனங்களையும் ஈர்த்த தரமான படைப்புகளாய் அமைந்திருந் தன. நேர முகாமைத்துவம், ஒழுங் கமைப்பு, மாணவர் ஒழுங்கு, ஆசிரியர் கூட்டுறவு அனைத்தும், பாடசாலையின் தரத்திற்கும் ஒரு சான்றாக அமைந் தமை, அதற்கு கிடைத்த ஒரு சிறப்பு பேறாகும் என்பது உண்மையாகும்.

தொகுப்பு:- ஆசிரியை சிறீன்குறோஜா

# யாழ் நாவாந்துறை புனித வின்சென்டிபோல் சபையினரின் நூற்றாண்டு விழாவும், சிறப்பு மலர்வெளியீடும்

திரு யோ. பிரான்சிஸ் செயலாளர் – மரியாள். பந்தி நாவாந்துறை.



"சின்னஞ்சிறிய ஒருவருக்கு இவற்றைச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்"

என்ற மகன் யேசுவின் வார்த் தையை மையப்படுத்தி இறையன்போடு கூடிய பிறரன்புப் பணிகளில் தங்களை இணைத்து செயல்பட்டுவரும் நாவாந் துறைப் புனித வின்சென்டிபோல் சபை 1910ம் ஆண்டு ஆடித்திங்கள் 19ம் நாள் அருட்சகோதரன் இயூஜின் குருசோ அவர்களால் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் இரண்டாவது சபையாக நாவாந்துறைப் பங்கிலே ஆரம்பிக்கப் பட்டது. இச்சபையானது வறுமையில் வாடும் மக்களின் துயர் துடைப்புப்பணி களில் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு ஏழ்மை, வறுமை, நோய்பிணியில் வருந்துவோரையும், கணவனை இழந்த கைம்பெண்கள், உடல்வளமுற்றோர், வயோதிபர் மட்டி லும் இறையரசின் விழுமியங்களோடு அவர்களது வாழ்வாதாரத்துக்குமாக தங்களாலான உதவிகளைச் செய்து வருகின்றது. இத்தோடு ஏழை வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற் காகவும் இயன்றவரை செயலாற்றி உதவுவதும் குறிப்பிட வேண்டியதாகும். இவர்களது செயற்பாடுகளுக்கு உறு துணையாக இப்பங்கில் பணியாற் றும் பங்குத் தந்தையர்களின் ஆலோ சனையும், உதவியும் இருந்து வருவதும் மேலும் பங்கு மக்களினதும் பங்கில் இருந்து புலம் பெயர்ந்து வெளி நாடுகளில் தொழில் புரியும் இப்பங்கு மக்களதும் அளப்பரிய உதவியுமே யாகும். மேற்படி வின்சென்டிபோல் சபை 26-09-2010 ஞாயிறு காலை 8.00 மணிக்கு நாவாந்துறைப் புனித பரலோக மாதா ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி பா.பி. இராஜசிங்கம் அடிகளாரின் அனுசரணையோடு யாழ் மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், ஆண்டகை அவர்களின் தலைமையில் கூட்டுத் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து சபையின் நூற்றாண்டு நிறைவு மலரும் ஆயர் அவர்களால் வெளியிடப் பட்டது. இந்நிகழ்வில் புனித வின்சென்டி போல் இலங்கைத் தேசிய சபையின் ஆன்ம ஆலோசகர், தேசிய சபையின் தலைவர், செயலாளர், பிராந்திய சபை களின் பிரதிநிதிகள், யாழ் மத்திய சபைத் தலைவர், ஆன்ம ஆலோசகர், மத்திய சபையின் உறுப்பினர்கள், மற்றும் யாழ் வின்சென்டிபோல் சபைகளின் உறுப்பினர் கள், பக்திச்சபையினர் சமூக சேவை ஸ்தா பனங்களின் பிரதிநிதிகள், பங்கு மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப் பித்தார்கள்.

நிகழ்வின் ஆரம்பத்தில் ஆயர் அவர்களும் வின்சென்டிபோல் சபையின் தலைவர்களும் இணைந்து சபையின் கொடியினை ஏற்றுவின்றனர்.


# 25ம் ஆண்டு நினைவஞ்சலி

# 45ம் ஆண்டு நினைவஞ்சலி



ஜோண் வேக்மன்ஸ் குமாரகுலசிங்கி
தோற்றம் 1924.09.01
மறைவு 1985.11.07

ஜேம்ஸ் பேனாட் குமாரகுலசிங்கி
தோற்றம் 1962.07.25
மறைவு 1966.12.11

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களை மரணத்திலும் மறவாதீர்கள்"

வேண்டுதல்

ஆறுதல் அளிக்கும் ஆண்டவர்!
கருணைத் தெய்வமே பொறுத்தலளிப்பதும்
இரக்கம் காட்டுவதும் உமக்கு இயல்பாமே

நீர் இவ்வுலகில் இருந்து உம்மிடம் அழைத்துக்கொண்ட ஜோன் வேக்மன்ஸ் குமாரகுலசிங்கி, ஜேம்ஸ் பேனாட் குமாரகுலசிங்கி என்னும் உமது அன்பு பிள்ளைகளுக்கு ஒளியும் அமைதியும் நிறைந்த பேரின்ப வாழ்வினை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

மனைவி, மகள், சகோதரிகள்
திரு.திருமதி. அன்ரன் ஜெம்பி
அருட்தந்தை ஆஞ்சலோ பொன்னையா
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Advt-85/10



# 22nd Year of Death Rememberance



"His faith did not leave him, and he did not doubt God's Promises. His faith filled him with power, and he gave praise to God." (Rom 4:20)

When I am in Heaven by the grace of God, and His Blessed Mother, and all your prayers, I will be in God, in the communion of saints and so in your hearts, and in all the hearts whom God's love unites. Be happy. God be with you and Amma and love to you till we meet.

Signed. P.J. Amirtbanayagam (3 – 8 – 81)

P.J. AMIRTHANAYAGAM
(Teacher at St. Patrick's College)
Born 22 – 02 – 1912
Died 05 – 11 – 1988

Mass will be offered at
Arul Archchramam at 6.00 A.M.
OLR Jaffna at 6.00 A.M

Advt-84/10

Family


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## ஒருவனுடைய ஆளுமை விருத்தி அடைவதற்கு மண்ணும் - பாடசாலையும் முக்கியமானது

**– பரிசளிப்பு விழாவில் பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி ஜெறோ –**

கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் பாடசாலையின் பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்த புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் தனது சிறப்புரையில் மாணவரின் ஆளுமை விருத்தி அடைவதற்கு அவன் வாழும் மண்ணும் - கல்வி கற்கும் பாடசாலையும் மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

ஐப்பசி மாதம் 20ம் திகதி கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம் பாடசாலையின் மிக முக்கிய நிகழ்வான பரிசளிப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் பத்திரிசியார் கல்லூரி அதிபர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். இவர் இப் பாடசாலையின் பழைய மாணவனும் இவ்வருடம் தனது குருத்துவத்தின் வெள்ளி விழா கொண்டாடியதும் குறிப்பிடத்தக்கது.

இப்பரிசளிப்பு விழாவில் கல்வி வலய அதிகாரிகளும்,பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் கலந்து கொண்டார்கள். பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி சகாயநாயகி பஸ்ரியாம்பிள்ளை அவர்கள் வருடாந்த அறிக்கையும், மாணவர்களது முன்னேற்றம் பற்றிய தெளிவான அறிக்கையை சமர்பித்தார்.

மாணவர்களது நடனம், சிறுவர்களின் "ஆதவனே வா" என்ற நாடகமும் எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றது.

## இறந்தோர் நினைவிடம் நோக்கி!

எதிர்வரும் கார்த்திகை 2ம் திகதி சகல இறந்த ஆன்மாக்களின் நினைவுதினமாகும். எம்மோடு ஒன்றாய் மண்ணில் வாழ்ந்து மறைந்த அன்புக்குரியவர்களை நினைந்து இறைவனுக்கு நன்றிகூறும் காலம் எம்மை பிரிந்தவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும் காலம் அத்தோடு வாழ்வோராகிய எம் மரணநேரத்தை நினைந்து அதற்காக எம்மை தயார்செய்யும் காலம் என்று இக்காலத்தின் செய்திகள் எம்மை அழைத்து நிற்கின்றன. கல்லறைகளை காணும் போதெல்லாம் நாமும் ஒருநாள்.... என்ற நிலையற்ற உலகவாழ்வு நினைவுக்கு வரவேண்டும். அப்போது நிலையான வானக வீட்டைநோக்கியதாக எம் இவ்வுலக வாழ்வு அமைந்து கொள்ளும். கார்த்திகை இரண்டு எம்வாழ்வில் ஒன்று.

## மன்னார் தமிழ்ச்சங்கம் நடாத்திய மன்னார் தமிழ்ச்செம்மொழி மாநாடு – 2010

**- தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது -**

தமிழின் பெருமையை உலகுக்கு எடுத்துச்சொல்லவும் மன்னார் பிரதேசத்தின் தமிழ் மொழியின் பூர்வீகத்தை அறிந்து கொள்ளவும் மன்னார் தமிழ்ச் சங்கம் தமிழ்ச்செம்மொழி மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்து நான்கு நாட்கள் சிறப்பாக நடாத்தி முடித்தது.

மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் மன்னார் மாவட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. டேவிட் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது மன்னார் பிரதேசத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

இறுதிநாள் நிகழ்வுகள் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மன்னார் பாலத்திலிருந்து பண்பாட்டுப்பேரணி ஆரம்பித்து நகரசபை மண்டபத்தை சென்றடைந்து அங்கு செம்மொழி மாநாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் மன்னார் ஆயர் அதி.வந். இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக அரச அதிபர்கள் தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இவர்களுடன் பல்கலைக்கழக பேராசிரியர்கள் எழுத்தாளர்கள் கவிஞர்கள் பத்திரிகைத்துறை சார்ந்தவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் தமிழ்மொழிக்கு பலவழிகளிலும் பங்களிப்பு செய்து வளம்சேர்த்த பேராளர்களுக்கு இலக்கிய சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் இச்செம்மொழி விழாவை



முன்னிட்டு நடாத்தப்பட்ட கட்டுரை கவிதைப்போட்டிகளில் முதலிடங்களை பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டனர்.

மன்னார் தமிழ்ச்செம்மொழி மாநாட்டின் ஏற்பாட்டிற்கும் வெற்றிக்கும் காரணமான அருட்பணி. தமிழ்நேசன் அடிகளாரின் தமிழ்ப்பணியை பலரும் வியந்து பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. அவரின் இந்த இலக்கிய முயற்சிக்கு பாதுகாவலனும் வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கிறது.

## வத்திக்கானின் தீபாவழி வாழ்த்து

எதிர்வரும் நவம்பர் 5ம் திகதி இந்துக்களால் கொண்டாடப்படவுள்ள தீபாவழியை முன்னிட்டு உலக இந்துக்கள் அனைவருக்கும வத்திக்கான் தனது மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிக்கிறது.

சர்வமத உரையாடல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கருதினால் ஜீன் லூயில் ரௌறான் அவர்கள் தனது இந்துக்களுக்கான தீபாவழி வாழ்த்துக் கடிதத்தில் சர்வ ஒளியாகிய இறைவன் மதநம்பிக்கை உள்ளவர்களின் மனதையும் இதயத்தையும் உறவுத் தொடர்புகளையும் உறுதிப்படுத்துவாராக என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் இணைந்து தற்காலத்தின் மிகப்பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்க பாடுபடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## "வாழ்வின் வேர்களைத் தேடி...." நூல் வெளியீடு

அருட்பணி மா. றேஜிஸ் இராசநாயகம் எழுதிய "வாழ்வின் வேர்களைத் தேடி" எனும் நூல் 25.10.2010 அன்று திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் வெளியிடப்பட்டது. ஆன்மீகம், வழிபாடு, இறையியல் ஆகிய தளங்களில் அருட்பணியாளர் தனது எண்ணங்களைப் பதிவு செய்துள்ளார். பாதுகாவலன் பத்திரிகையில் வெளியான கட்டுரைகள் உட்பட தனது ஆக்கங்களை இந்நூலில் தொகுத்துள்ளார்.

வெளியீட்டு விழாவில் மறை மாவட்ட குரு முதல்வர் அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இந்நூலுக்கான ஆய்வுரையை அருட்பணி இ.ம. ஜெயசீலன் அடிகளும் நயப்புரையை அருட்பணி ம.கி.வி. ரவிச்சந்திரனும் வழங்கினர். ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் திரு. இக்னேஷியஸ் முதற்பிரதியை பெற்றறுக்கொண்டார். நூல் ஒன்றின் விலை ரூபா 150.

## ஆவிக்குரிய இயல்புகளுக்கும், (1ம் பக்க தொடர்ச்சி............)

நிறைவாகபெற்று அவர் என்றும் நிலைத்து வாழ எம்வாழ்வினை வளமாக்கி திருச்சபையின் போர்வீரர்களாக திகழ்ந்து ஆரோக்கியமான திருச்சபையினை கட்டியெழுப்ப என்று நீங்கள் துணையாக இருக்க வேண்டும் எனவும் இறையழைத்தல்கள் அதிகரிக்க வேண்டும் எனவும் தனது மறையுரையில் கூறினார்.

மாதகல் பங்கில் 11.09.2010 காலை 7.00 புனித தோமையார்ர் ஆலயத்தில் 92 மாணவர்களுக்கு உறுதிபூசுதல் என்னும் அருட்சாதனத்தினை யாழ். மறைமாவட்ட ஆயர் மேன்மை தங்கிய தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களால் வழங்கப்பட்டது. இவ் உறுதிப்படுத்தல் அருட்சாதன செயற்பாடுகள் யாவற்றினையும் மாதகல் பங்குத்தந்தை அவர்கள் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

J. அனுஸ்

## கிளாலி புனித மிக்கேல் ஆலயத் திருவிழா கெற்பேலி ஆலயத்தில்



கிளாலியில் அமைந்துள்ள புனித மிக்கேல் ஆலய திருவிழாத் திருப்பலி கெற்பேலி திருக்குடும்ப ஆலயத்தில் கடந்த 29-9-2010 அன்று மாலை 5.00 மணிக்கு கொண்டாடப்பட்டது.

புனித. மிக்கேல் ஆலய மக்கள் அவ் ஆலயத்தில் திருவிழா கொண்டாட இராணுவம் அனுமதி கொடுக்காத நிலையில் அந்த ஆலயத்தைச் சேர்ந்த மக்கள் ஒன்று கூடி கெற்பேலி திருக்குடும்ப ஆலயத்தில் திருவிழா கொண்டாடினார்கள்.

பங்குத் தந்தை ம. அருட்பணி தயாபரன் அவர்கள் திருப்பலி ஒப்புக் கொடுத்து, மறையுரையாற்றி, திருச்சுரூப ஆசீரும் வழங்கினார்.

ஜெயா திருநேசன், மிருசுவில்

## யாழ். மரியன்னை பேராலய உறுதிபூசுதல் மாணவர்கள் விசுவமடு தற்காலிக முகாமிலுள்ள மக்களை சந்தித்தனர்

**- அருட்பணி அன்ரன் ஸ்ரீபன் -**



யாழ். மரியன்னை போரலய பங்குத்தந்தை அருட்பணி ஆர். எச். சகாயநாயகம், உதவிப்பங்குத் தந்தை அருட்பணி அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் மற்றும் உறுதிபூசுதல் பெறும் 86 மாணவர்கள், 10 மறையாசிரியர்கள் அனைவரும் 22.10.2010 வெளிக்கள தரிசிப்பிற்காக தர்மபுரம் பங்கிற்கு சென்றிருந்தனர். அங்கு சென்று தர்மபுரம் பங்குத்தந்தை அருட்பணி எட்வின் நாதன் அடிகளாருடன் விசுவமடு ரெட்பானா முகாமிற்கு சென்று அங்குள்ள மாணவர்கள், பெற்றோர்கள், இளைஞர் யுவதிகளை சந்தித்து உரையாடியதுடன் தங்களுடைய வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

பேராலய பங்கிலிருந்து சென்ற மாணவர்கள் தாம் ஒவ்வொருவரும் அங்குள்ள மாணவர்களுக்கு தம்மால் இயன்ற கல்வி உபகரணங்களை வழங்கியதுடன் பங்குத்தந்தையர்களாலும் உதவிப் பொருட்களும் அம்மாணவர்களின் இரவுப் பாடசாலைக்காக 50,000/= வும் வழங்கப்பட்டது. மேலும் அம்மக்களுக்கு உதவிகள் தேவைப்படின் தம்மால் இயன்ற உதவிகளை வழங்குவதாகவும் கூறப்பட்டது.

இத்தரிசிப்பின் மூலம் மாணவர்கள் மத்தியில் மனமாற்றங்கள் வெளிப்படுத்தும் விதத்தில் தங்கள் உணர்வுபூர்வ உறவின் சங்கமத்தின் மூலம் தொடர்பணிகளில் ஈடுபடவும் கிறிஸ்தவ விழுமியங்களை செயல்படுத்தவும் தூண்டலாய் அமைந்தது. இம்முயற்சிகள் ஏனைய பகுதியில் இருந்து தரிசிப்புக்காக வரும் மக்களிற்கு தூண்டக்கூடிய செய்திகளாகும்.

யாழ் மண்ணை தரிசிக்க வரும் 2 லட்சத்துக்கு மேற்பட்ட பயணிகள் இதுவரை எத்தனை மக்களின் உள்ளங்களை தொடும் உறவுப் பரிமாற்றங்களை ஏற்படுத்தியிருப்பார்கள் என்பது வழி காட்டும் தலைவர்களை சிந்திக்க தூண்டும் விடயமாகும்.

## ஞான ஒளி

ஞானஒளி என்ற பெயரில் புதிய கத்தோலிக்க பத்திரிகை ஒன்று பேராயர் மல்கம் ரஞ்சித்தின் ஆலோசனையின் பெயரில் கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2010 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org